
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ




# ஹஜ், உம்ரா
## ஒரு பார்வையில்

தொழுகை நேர அட்டவணையுடன்



مكتبة المدينة
MAKTABA-TUL-MADINAH
MC 1286



## உம்ராவுக்கான நிய்யத்:


اَللّٰهُمَّ اِنِّیْۤ اُرِیْدُ الْعُمْرَةَ فَیَسِّرْهَا لِیْ وَتَقَبَّلْهَا مِنِّیْ وَاَعِنِّیْ عَلَیْهَا وَبَارِكْ لِیْ
فِیْهَا ؕ نَوَیْتُ الْعُمْرَةَ وَاَحْرَمْتُ بِهَا لِلّٰهِ تَعَالٰی ؕ

**யா அல்லாஹ் عزّوجلّ! நான் உம்ரா செய்ய நாடுகிறேன், எனக்கு அதை இலேசாக்கி வைப்பாயாக, மேலும் அதை என் புறத்திலிருந்து ஒப்புக் கொள்வாயாக, இன்னும் அதை (நிறைவேற்றுவதில்) எனக்கு உதவி செய்வாயாக, மேலும் அதை எனக்கு பரக்கத்தாகி வைப்பாயாக, நான் உம்ராவுக்காக நிய்யத் வைத்து, அல்லாஹ் عزّوجلّ வுக்காக இஹ்ராம் கட்டினேன்.**

நகங்கள் மற்றும் மறைவான இடங்களிலுள்ள உரோமங்களை வெட்டி, குளித்து விட்டு இஸ்லாமிய சகோதரர்கள் இஹ்ராம் கட்டுங்கள். இஸ்லாமிய சகோதரிகள் வழமையாக அணியும் ஆடையை அணியுங்கள். அத்தர் பூசுவதோடு மக்ரூஹான நேரம் இல்லாவிட்டால் இஹ்ராமுக்கான இரண்டு ரக்அத் நஃபில் தொழுது கொள்ளுங்கள். இஸ்லாமிய சகோதரர்கள் தலையை திறந்துக் கொள்ளுங்கள். இஸ்லாமிய சகோதரிகளும் முகத்தில் புடவை போட வேண்டாம். உம்ராவுக்கு நிய்யத் வைத்துக் கொள்ளுங் கள். பின்பு மூன்று தடவைகள் لبيك கூறுங்கள்:

لَبَّیْكَ ؕ اَللّٰهُمَّ لَبَّیْكَ ؕ لَبَّیْكَ لَا شَرِیْكَ لَكَ لَبَّیْكَ ؕ
اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ ؕ لَا شَرِیْكَ لَكَ ؕ

**நான் சமுகமளித்து விட்டேன், யா அல்லாஹ் عزّوجلّ நான் சமுகமளித்து விட்டேன். (இதோ) நான் சமுகமளித்து விட்டேன். உனக்கு எந்தவொரு இணையுமில்லை. நான் சமுகமளித்து விட்டேன். நிச்சயமாக எல்லாப் புகழும், பாக்கியமும் உனக்காகும். இன்னும் அரசாட்சியும் உன்னுடையதாகும். உனக்கு எந்தவொரு இணையுமில்லை.**



## தவாஃபுக்கான நிய்யத்

இஸ்லாமிய சகோதரர்கள் வலது தோள் பட்டையை திறந்து, கஃபாவுடைய ருக்னே யமனியின் திசையில் ஹஜருல் அஸ்வதின் பக்கத்தில், முழு ஹஜருல் அஸ்வதும் வலது கையின் பக்கம் இருக்குமாறு நின்றுக் கொள்ளுங் கள். இப்போது தவாஃபுக்காக இவ்வாறு நிய்யத் வைத்துக் கொள்ளுங்கள்,

اَللّٰهُمَّ اِنِّيْٓ اُرِيْدُ طَوَافَ بَيْتِكَ الْحَرَامِ فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ ط

யா அல்லாஹ் عزّوجلّ நான் உன்னுடைய சங்கையான வீட்டை தவாஃப் செய்ய நாடுகிறேன், நீ அதை எனக்கு இலேசாக்கி தருவாயாக. மேலும் என் புறத்திலிருந்து நீ அதை ஒப்புக் கொள்வாயாக.

இப்போது கஃபாவை முன்னோக்கி தனது வலது பக்கம் கொஞ்சம் நடந்து சென்று சரியாக ஹஜருல் அஸ்வதுக்கு முன்னால் வந்து இரண்டு உள்ளங்கைகளும் ஹஜருல் அஸ்வதின் பக்கம் இருக்குமாறு கைகளை காதுவரை உயர்த்தி இவ்வாறு கூறுங்கள்.

بِسْمِ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَاللّٰهُ اَكْبَرُ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ ط

அல்லாஹ் عزّوجلّ வின் திருநாமத்தால், எல்லாப் புகழும் அல்லாஹ் عزّوجلّ வுக்கே உரித்தாகட்டும். இன்னும் அல்லாஹ் عزّوجلّ மிகப் பெரியவன் மேலும் அல்லாஹ் عزّوجلّ வின் திருத்தூதர் صلى الله تعالى عليه واله وسلم அன்னவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகட்டும்.

பின்பு ஹஜருல் அஸ்வதை இஸ்திலாம் செய்யுங்கள். பின்பு உடனடியாக கஃபா ஷரீப் உங்களின் இடது பக்கம் இருக்குமாறு வலப்பக்கமாக திரும்புங்கள். இஸ்லாமிய சகோதரர்கள் முதல் மூன்று சுற்றிலும் ரம்ல் செய்ய வேண்டும். அதாவது அவசர அவசரமாக சிறுசிறு எட்டுக்களை வைத்து தோளை அசைத்துக் கொண்டு நடப்பதாகும். ருக்னே அஸ்வதில் ஒரு சுற்று பூர்த்தியாகி விடும். பின்பு முன்னால் செய்ததைப் போல் இஸ்திலாம்



செய்யுங்கள். இப்போது நிய்யத் அவசியமல்ல. மூன்று சுற்றுகளுக்குப் பின் இஸ்லாமிய சகோதரர்கள் சாதாரன நடையாக தவா:.ப் செய்ய வேண்டும். ஏழு சுற்றுகளும் முடிந்த பின் 8 வது தடவை இஸ்திலாம் செய்யவும். இப்போது வலது தோள் பட்டையை மூடிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு தவா:.பிலும் ஏழு சுற்றும், எட்டு இஸ்திலாமும் உண்டு. இப்போது மக்ரூஹான நேரம் இல்லாவிட்டால் உடனே அல்லது பிறகு மஸ்ஜிதுல் ஹராமில் வாஜிபுத் தவா:.ப் இரண்டு ரக்அத் தொழுது கொள்ளுங்கள். பின்பு முல்தஸிமில் துஆ கேளுங்கள். அதன் பின்னர் கிப்லாவின் பக்கம் திரும்பி நின்றவாறே ஸம்ஸம் நீரை பருகுங்கள்.

## ஸஈ

முன்பு செய்ததைப்போல் 9 ஆம் தடவை இஸ்திலாம் செய்யுங்கள். ஸ:.பா மலையின் மார்பல் பிடித்திருக்கும் பகுதியில், க:.பா ஷரீ:.ப் தென்படும் அளவு கொஞ்சம் ஏறி, கிப்லாவை முன்னோக்கியவனாக கைகளை உயர்த்தி துஆ கேளுங்கள். பின்பு ஸஈ செய்வதற்காக நிய்யத் வைப்பது முஸ்தஹப்பாகும். நிய்யத் இல்லாமலும் ஸஈ செய்யலாம். இஸ்லாமிய சகோதரர்கள் பச்சை மேலோன் (அதாவது பச்சை லைட்களுக்கு) இடையில் ஓடுங்கள். மர்வா வந்து விட்டது! ஒரு சுற்று நிறைவடைந்தது. check tiles க்கு கீழே கிப்லாவை முன்னோக்கி முதல் செய்ததைப் போல் துஆ கேளுங்கள். நிய்யத் அவசியமல்ல. இவ்வாறே நடந்தும், ஓடியும் ஏழாவது சுற்று மர்வாவில் முடிவடையும். “புதிதாக அமைக்கப்பட்டுள்ள இடத்தில்” ஸஈ செய்யாமல் கீழால் ஸஈ செய்து விட்டு, பின்பு முடியை இறக்குங்கள் அல்லது வெட்டுங்கள். வெட்டும்போது தலை முடியின் $^1/_4$ பகுதியை, குறைந்தளவு விரல்களின் ஒரு அங்குல அளவாவது வெட்டுவது அவசியமாகும். கத்திரியைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று இடங்களில் ஒரு சில முடிகளை வெட்டுவதால் இஹ்ராமுடைய கட்டுப்பாடுகள் முடிந்து விடாது.



இஸ்லாமிய சகோதரர்கள் முடிகளை குறைத்துக் கொள்ளுங்கள். உம்ரா சம்பூரணமாகி விட்டது. ஹஜ்ஜே தமத்துஹ் செய்பவர்கள் முடிகளை இறக்குவது அல்லது குறைத்ததன் பின் இஹ்ராமிலிருந்து நீங்கி விடுவார்கள். ஆனால் ஹஜ்ஜே “இஃப்ராத்” மற்றும் “கிரான்” செய்பவர்கள் இப்பொழுதே முடியை இறக்கவோ, குறைக்கவோ முடியாது. அவர்கள் அதே இஹ்ராமுடன் ஹஜ் செய்வார்கள். இஃப்ராத் செய்பவர்களுக்கு இந்த தவாஃப், தவாஃபே குதூம் ஆகும். கிரான் செய்பவர்கள் இதற்குப் பின் தவாஃபே குதூமின் நிய்யத் வைத்து இன்னுமொரு தவாஃபும், ஸயீயும் நிறைவேற்ற வேண்டும்.

## ஹஜ்ஜுடைய நிய்யத்:

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ الْحَجَّ فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ وَاَعِنِّيْ عَلَيْهِ وَبَارِكْ لِيْ فِيْهِ ؕ
نَوَيْتُ الْحَجَّ وَاَحْرَمْتُ بِهٖ لِلّٰهِ تَعَالٰى ؕ

யா அல்லாஹ் عزوجل! நான் ஹஜ் செய்ய நாடுகிறேன், எனக்கு அதை இலேசாக்கி வைப்பாயாக, மேலும் அதை என் புறத்திலிருந்து ஒப்புக் கொள்வாயாக, இன்னும் அதில் எனக்கு உதவி செய்வாயாக, மேலும் அதை எனக்கு பரக்கத்தாகி வைப்பாயாக, நான் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்து, அல்லாஹ் عزوجل வுக்காக இஹ்ராம் கட்டினேன்.

## ஹஜ்ஜுடைய முதல் நாள்

துல்ஹஜ் 8ஆம் நாள் இஹ்ராம் அணிந்து ஹஜ்ஜுக்காக நிய்யத் மேலும் லப்பைக், இப்போது ஹஜ்ஜே தமத்துஹ் உடையவர்கள் விரும்பினால் ஒரு நஃபில் தவாஃபில் ஹஜ்ஜுடைய ரம்ல் மற்றும் ஸஈ முடித்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் தவாஃபுல் ஸியாராவில் ஹஜ்ஜுடைய ரம்ல் மற்றும் ஸஈ செய்துக் கொள்ளுங்கள். இதுவே இலேசாகும். மினா ஷரீஃபுக்கு புறப்படுதல், 8ம் நாள் ளுஹர் தொழுகையிலிருந்து 9ம் நாள் சுபஹ் வரை ஐந்து நேரத் தொழுகைகளையும் மினாவில் தொழுவது ஸுன்னத்தாகும்.



## ஹஜ்ஜுடைய இரண்டாவது நாள்

துல்ஹஜ் 9ஆம் நாள் அரஃபா மலையை நோக்கி செல்வது, பகல் நேரம் அரஃபாவில் தரிப்பது, சூரியன் மறைந்ததும் மஃரிப் தொழாமல் முஸ்தலிஃபாவுக்குச் சென்று இஷாவுடைய நேரத்தில் மஃரிபையும், இஷாவையும் சேர்த்து தொழுதல், ரமீக்காக (கல் எறிவதற்காக) 49 ஐ விட கொஞ்சம் அதிகமாக சிறு கற்களை சேர்த்துக் கொள்வது, 10ம் நாள் சுபஹ் ஸாதிக்குப் பிறகு முஸ்தலிஃபாவில் தரிப்பது, சுபஹ் தொழுகைக்கு பின் மினா ஷரீஃபுக்கு செல்வது.

## ஹஜ்ஜுடைய மூன்றாம் நாள்

துல்ஹஜ் 10ஆம் நாள் சூரியன் உதித்த பிறகு பெரிய ஷைத்தானுக்கு 7 கற்களைக் கொண்டு எறிவது, பின்னர் குர்பான் செய்வது (ஒருபோதும் டோக்கன் வாங்க வேண்டாம்) பின்பு முடி இறக்குதல் அல்லது குறைத்தல், பின்னர் தவாபுஸ் ஸியாரா.

## ஹஜ்ஜுடைய நான்காம் நாள்

துல்ஹஜ் 11ஆம் நாள் ளுஹர் நேரம் ஆரம்பித்த பின், முதலாவது சிறிய பின்பு நடுத்தர அதன் பின் பெரிய ஷைத்தான்களுக்கு கல் எறிவது, இரவில் மினா ஷரீஃபில் தங்குவது.

## ஹஜ்ஜுடைய ஐந்தாம் நாள்

துல்ஹஜ் 12ஆம் நாள் ளுஹருடைய நேரம் ஆரம்பித்த பிறகு, 11ஆம் நாள் செய்ததைப்போல் மூன்று ஷைத்தானுக்கும் கல் எறிவது, அதேபோல் 13ஆம் நாள் கல் எறியா விட்டால் சூரியன் மறையும் முன் மினாவுடைய எல்லையை விட்டும் வெளியாக வேண்டும். இஸ்லாமிய சகோதரிகளும் மூன்று நாட்கள் தன் கையால் கல் எறிவது வாஜிபாகும். மேலும் வாஜிபை விட்டால் தம் (இரத்தம் பலியிடுவது) வாஜிபாகும். மேலும் யாராவது இதுவரை தவாஃபுஸ் ஸியாரா செய்ய வில்லையானால் 12ம் நாள் சூரியன் மறையும் முன் செய்துக் கொள்ளவும்.

**இந்த அட்டை போதுமானதல்ல, ரஃபீகுல் ஹரமைன் படிக்கவும். பின்பு இந்த அட்டையைக் கொண்டு ஹஜ்ஜுடைய கடமைகளை நிறைவேற்றவும். ம்**



# ரஸூல் ﷺ அன்னவர்களின் ரவ்ழாவுக்கு ஸமூகமளித்தல்

மஸ்ஜிதுன் நபவியுடைய புனித வாயலுக்கு முன்னால் நின்று அனுமதி கேட்கும் நிய்யத்துடன் கூறுங்கள்:

اَلصَّلٰوةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ

ஸனெஹ்ரி ஜாலிக்கு (தங்க வலைத்தட்டுக்கு) நேராக பெரிய ஓட்டைக்கும், இரண்டு சின்ன ஓட்டைகளுக்கும் மத்தியில் புனித கதவின் கிழக்குப் பக்கமாக போடப்பட்டிருக்கும் வெள்ளி தட்டுக்கு நேராக குறைந்தளவு இரண்டு முழம் தூரத்தில் நின்று தொழுகைக்காக கை கட்டுவது போல் கட்டி, கண்மணி நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சன்னிதானத்தில் நடுத்தரமான சப்தத்தில் இவ்வாறு ஸலவாத்து ஸலாமும் கூறுங்கள்:

اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهٗ ط اَلسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ ط اَلسَّلَامُ عَلَيْكَ يَا خَيْرَ خَلْقِ اللهِ ط اَلسَّلَامُ عَلَيْكَ يَا شَفِيْعَ الْمُذْنِبِيْنَ ط اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى اٰلِكَ وَاَصْحَابِكَ وَاُمَّتِكَ اَجْمَعِيْنَ ط

நபியே (صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم) தாங்கள் மீது ஸலாமும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய ரஹ்மத்தும், பரகத்தும் உண்டாவதாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் ரஸூலே صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم தாங்கள் மீது ஸலாம் உண்டாவதாக, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அனைத்து படைப்பினங்களிலும் மேன்மையானவர்களே தாங்கள் மீது ஸலாம் உண்டாவதாக, பாவிகளுக்கு ஷஃபாஅத் செய்பவர்களே தாங்கள் மீது ஸலாம் உண்டாவதாக, தாங்கள் மீதும், தாங்களின் குடும்பத்தினர்கள், ஸஹாபாக்கள் மேலும் தாங்களின் அனைத்து உம்மத்தினர்கள் மீதும் ஸலாம் உண்டாவதாக.

துஆவுக்காக சங்கையான வாயிலுக்கு ஒருபோதும் புறமுகம் காட்டாதீர்கள்.